சென்னை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08

ந.க.எண். 7401/அ5/2022, நாள். 23.12.2022

பொருள்: பள்ளிக் கல்வித் துறை - சென்னை மாவட்டம் - அனைத்து வகைப் பள்ளிகளுக்கு அரையாண்டு தேர்வு விடுமுறை அறிவிப்பு - விடுமுறைக்குப் பின் மீண்டும் பள்ளிகள் திறப்பது - சார்பு.

பார்வை: சென்னை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண். 5929/அ5/2022 நாள். 01.12.2022 மற்றும் 16.12.2022

------

பார்வையில் காணும் செயல்முறைகளின்படி, வழங்கப்பட்ட தேர்வு கால அட்டவணையின் அடிப்படையில் அரையாண்டு தேர்வுகள் நடைபெற்று இறுதி தேர்வானது 23.12.2022 அன்று முடிவுறும் நிலையில் சென்னை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அனைத்து வகை பள்ளிகளுக்கும் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள பள்ளி வேலை நாள் கால அட்டவணையின்படி 24.12.2022 முதல் 01.01.2023 வரை அரையாண்டு தேர்வு விடுமுறை அளிக்கப்படுகிறது. விடுமுறை முடிந்து 02.01.2023 அன்று பள்ளி வழக்கம் போல் செயல்படும்.

மேலும் அரையாண்டுத்தேர்வு விடுமுறை நாட்களில் எந்தவிதமான நேரடி வகுப்புகளும் நடத்திட அனுமதி இல்லை. மாணவர்களின் கல்விநலன் கருதி சார்ந்த பாட ஆசிரியர்கள் மூலம் வீட்டுப்பாடங்கள் மற்றும் செய்முறை பதிவேடுகள் உள்ளிட்ட ஒப்படைப்புகளை (Assignment) மாணவர்களுக்கு தெரிவித்து அதனை செய்து முடித்து பள்ளித் திறக்கும் நாளில் சார்ந்த ஆசிரியர்களிடம் ஒப்படைத்திட அறிவுறுத்துமாறும் அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

23/12/2022

முதன்மைக் கல்வி அலுவலர்

சென்னை.

23/12/22

பெறுநர்

1. அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்,(மாநிலப் பாடத்திட்டம்) சென்னை மாவட்டம். (மாவட்டக் கல்வி அலுவலர்கள் வழியாக)
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் சென்னைமாவட்டம்.
3. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்.

நகல்

1. ஆணையர், பள்ளிக் கல்வி ஆணையரகம், சென்னை-06 தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை-06 தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
3. இயக்குநர், மெட்ரிக் பள்ளிகள் இயக்ககம் சென்னை-06 தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
4. கல்வி அலுவலர், சென்னை பள்ளிகள் , பெருநகர சென்னை மாநகராட்சி சென்னை-03 தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது

Scanned with OKEN Scanner